<u>சாதாரண கூட்டம்</u>

**கூத்தாநல்லூர் நகராட்சியின் 2020ம் ஆண்டு ஜீன் மாதம் 30ம் நாள்** செவ்வாய்கிழமை காலை 11.00 **மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

| மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 30.06.2020 | **பொருள் எண்** 1<br>நகராட்சி ஆணையர் அவர்களது மே 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:-732 அனுமதிக்கப்பட்டது** |
| 30.06.2020 | **பொருள் எண்** 2<br>நகராட்சி பொறியாளர் அவர்களது மே 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:-733 அனுமதிக்கப்பட்டது** |
| 30.06.2020 | **பொருள் எண்** 3<br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் TN 50 U – 0518 வாகனத்தின் ஓட்டுனர் ஏ.ஆரோக்கியதாஸ் அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு கீழ்குறிப்பிட்டுள்ள இடங்களில் வைக்கப்பட்டிருந்த டம்பர் பின் குப்பை பெட்டிகள் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது | **தீர்மானம் எண்:-734 அனுமதிக்கப்பட்டது** |

| வ.எண் | தெருவின் பெயர் |
|---|---|
| 1 | கம்பர் தெரு |
| 2 | வள்ளுவர் காலனி |
| 3 | லெட்சுமாங்குடி கடைத்தெரு |
| 4 | மரக்கடை மெயின் ரோடு |
| 5 | வ.உ.சி ரோடு |
| 6 | சிவன் கோவில் தெரு |
| 7 | ரஹ்மானியா தெரு |
| 8 | திருவாரூர் ரோடு |
| 9 | ரேடியோ பார்க் |
| 10 | ஜின்னா தெரு |
| 11 | முகமது அலி தெரு |
| 12 | பாய்க்காரத் தெரு |

<table>
<tr>
<td></td>
<td>மேற்படி குப்பை பெட்டிகள் வைக்கப்பட்டிருந்த இடங்கள் அனைத்தும் நகரின் முக்கிய இடங்கள் மற்றும் கடைவீதிகள் ஆகும். எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி குப்பை தொட்டிகளை பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,10,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 452/2020/எச்1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.06.2020</td>
<td>பொருள் எண் 4<br>இந்நகராட்சி பொதுப்பிரிவில் இயங்கி வரும் TN 50 U 2453 ஈப்பு வாகனம் பழுது நீக்கம் செய்வதற்கு ரூ.50,000/-க்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 729 நாள் 29.05.2020 அனுமதி பெறப்பட்டு, மேற்படி வாகனம் அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான திருச்சி சிவா ஆட்டோ மொபைல்ஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சி நிறுவனம் மூலமாக மேற்படி வாகனம் பழுதுகள் நீக்கம் செய்யப்பட்டு, தற்போது மேற்படி நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை ரூ.61,808/- வரப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட தொகையைவிட வரப்பட்ட பட்டியலிற்கான கூடுதல் செலவினம் ரூ.11,808/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி கூடுதல் செலவினத்திற்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றுள்ளதை மன்றம் ஏற்கலாம்<br>(ந.க.எண்.420/2020/இ1)</td>
<td>தீர்மானம் எண்:-735<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.06.2020</td>
<td>பொருள் எண் 5<br>இந்நகராட்சி குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் குளோரின் கலந்து குடிநீர் வழங்க உபயோகப்படுத்தப்படும் குளோரின் திரவம் சப்ளை செய்யும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 731 நாள் 29.05.2020ன்படி அனுமதிக்கப்பட்டு 18.06.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த தொகை</th><th>ஒப்பந்தபுள்ளி தொகை</th><th>சதவிகிதம்</th></tr>
<tr><td>1</td><td>பகவதி ஏஜென்சீஸ் மன்னார்குடி</td><td>438000</td><td>436540</td><td>0.33 % மதிப்பீட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>காவ்யா எண்டர்பிரைசஸ் மன்னார்குடி</td><td>438000</td><td>467200</td><td>6.67% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
</table>
</td>
<td>தீர்மானம் எண்:-736<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள பகவதி ஏஜென்சீஸ் மன்னார்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.33% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 529/2020/இ1)</td><td></td></tr>
<tr><td>30.06.2020</td><td>பொருள் எண் 6<br>இந்நகராட்சியில் உள்ள அம்மா உணவகத்திற்கு புதியதாக கிரைண்டர் வாங்கும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 727 நாள் 29.05.2020ன்படி அனுமதிக்கப்பட்டு 18.06.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த தொகை</th><th>ஒப்பந்தபுள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td>திரு.எம்.உதயகுமார் மரக்கடை மெயின் ரோடு லெட்சுமாங்குடி</td><td>30000</td><td>24700</td></tr>
<tr><td>2</td><td>திரு.வீ.எழில்மாறன் கொரடாச்சேரி ரோடு லெட்சுமாங்குடி</td><td>30000</td><td>25000</td></tr>
</table>
மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.எம்.உதயகுமார் மரக்கடை மெயின் ரோடு லெட்சுமாங்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 510/2020/இ1)</td><td>தீர்மானம் எண்:-737<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| 30.06.2020 | **பொருள் எண் 7**<br>இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் குடிநீர் பராமரிப்பு மற்றும் இந்தியா மார்க் II பம்ப் பழுது நீக்கும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 726 நாள் 29.05.2020ன்படி அனுமதிக்கப்பட்டு 18.06.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது. | **தீர்மானம் எண்:-738 அனுமதிக்கப்பட்டது** |
|---|---|---|

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.வி எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு லெட்சுமாங்குடி | 923244 | 922026 | 0.13 % மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.பி.செந்தில்நாதன ஒப்பந்ததாரர் மரக்கடை தெற்கு தெரு லெட்சுமாங்குடி | 923244 | 925680 | 0.26 % மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.வி எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.13% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 461/2020/இ1)

| | | |
|---|---|---|
| 30.06.2020 | **பொருள் எண் 8**<br>பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 50 AY-2779 வாகனத்திற்கு 19.07.2020 உடன் தகுதிச்சான்று முடிவடைவதால் அவ்வாகனத்திற்கு பெயின்டிங் மற்றும் சிறு பழுதுகள் நீக்கம் செய்து தகுதிச்சான்று பெறுவதற்கு உத்தேச செலவினமாக ரூ.20,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 319/2018/எச்1) | **தீர்மானம் எண்:-739**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.06.2020 | **பொருள் எண் 9**<br>பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 50 X 2638 வாகனத்திற்கு தகுதிசான்று முடிவடைந்துள்ளது. கீழ்கண்ட பணிகளை பழுது நீக்கி போக்குவரத்து சான்று பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. நான்கு வீல் கிரீஸ் பேரிங் வேலை பார்த்தல்<br>2. டிங்கரிங் பெயின்டிங் வேலை பார்த்தல்<br>3. ஆயில் ஃபில்டர் டீசல் ஃபில்டர் மாற்றுதல்<br>4. ஹெட் சர்வீஸ் பார்த்தல்<br>5. ரேடியேட்டர் மாற்றுதல்<br>6. கிளச் ஆக்ஸிலேட்டர் கேபிள் மாற்றுதல்<br>7. கீர் பாக்ஸ் வேலை பார்த்தல்<br>8. எலக்ட்ரிக்கல் வேலை பார்த்தல்<br>9. ஃப்ரண்ட் டயர் ரன்னிங் பெல்ட் வேலை பார்த்தல்<br>10. ஜாய்ன்ட் வேலை பார்த்தல்<br>11. டீசல் வாட்டர் ஓஸ் மாற்றுதல்<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் 523/2020/எச்1) | **தீர்மானம் எண்:-740**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 30.06.2020 | **பொருள் எண் 10**<br>திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 03.04.2020ம் தேதிய தொலைபேசி மற்றும் வாட்ஸ் அப் செய்தியில் வாகனத்தில் வைத்து அடிக்கக்கூடிய கிருமிநாசினி இயந்திரங்கள் மூன்று எண்ணிக்கை கூத்தாநல்லூர் நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதனை TATA ACE வாகனத்தில் வைத்து அனைத்து பகுதிகளிலும் கிருமிநாசினி தெளித்திட மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. எனவே மூன்று டாடா ஏஸ் வாகனம் எடுத்து வர மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தால் அறிவுறுத்தப்பட்டது. தற்போது இந்நகராட்சியில் இரண்டு டாடா ஏஸ் வாகனம் மட்டுமே பயன்படுத்தக்கூடிய நிலையில் இருப்பதால் ஒரு டாடா ஏஸ் வாகனம் வாடகைக்கு எடுக்க வேண்டி உள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 02.04.2020ம் தேதிய கடித எண் 3336/J2/2020-9ல் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்கான எந்த ஒரு பணிக்கும் ஒப்பந்த வழிமுறையினை பின்பற்றாமல் நேரடியாக பணி மேற்கொள்ளலாம் என அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மேற்படி வாகனத்திற்கு தேவையான பெட்ரோல் (ம) டீசல் மற்றும் இரண்டு கிருமிநாசினி இயந்திரத்திற்கான எரிபொருள் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 703 நாள் 30.04.2020ல் ரூ. 1,00,000/-த்திற்கு முன் அனுமதி பெறப்பட்டு அதில் ரூ.96,264/- செலவிடப்பட்டுள்ளது. தற்போது மேற்படி பணிகளை மீண்டும் தொடர ஆகும் உத்தேச செலவினமான ரூ.1,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் 11.06.2020ல் முன் அனுமதி பெற்றதை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 0335/2020/எச்1) | **தீர்மானம் எண்:-741**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.06.2020 | **பொருள் எண் 11**<br>இந்நகராட்சி புதிய அலுவலகத்தில் வசூல் மையம் மற்றும் பிறப்பு, இறப்பு மையத்தில் பொதுமக்கள் அதிகமாக வரும் நேரங்களில் போதுமான இருக்கைகள் இல்லாததால் Sitting Bench அமைக்கவும் ஆணையர் அறைக்கு சாய்வு நாற்காலி அமைக்க வேண்டியுள்ளதால் அதற்கான உத்தேச தொகை ரூ.40,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண். 591/2020/இ1) | **தீர்மானம் எண்:-742**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 30.06.2020 | **பொருள் எண் 12**<br>இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக 52 தூய்மை பணியாளர்களை கொண்டு குப்பைகளை தரம் பிரித்து வாங்கும் பணி சமுதாய உரக்கிடங்குகள் அமைத்து உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இந்நிலையில் ஏற்கனவே இப்பணிக்காக இந்நகர் மன்ற தீர்மான எண் 465 நாள் 30.05.2019ல் ரூ.77,60,000 (ஏழுபத்து ஏழு லட்சத்து அறுபதாயிரத்திற்கு) மாவட்ட ஆட்சியர் திருவாரூர் அவர்களின் தினக்கூலி விலை விகித அடிப்படையில் மேற்படி 52 பணியாளர்களை பணி அமர்த்தி பணி மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டு தீ.கரன் சமூக தொண்டு நிறுவனம் மூலம் 01.07.2019 முதல் 30.06.2020 வரை பணி மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 01.07.2020 முதல் 30.06.2021 வரை 52 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்த 26.06.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளி நிர்வாக காரணத்தினால் ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனை சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரரிடம் 27.06.2020 அன்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளின் கால அவகாசம் 30.06.2020 உடன் முடிவடைவதால் பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன் கருதி மேற்படி பணியினை 01.07.2020 முதல் 31.08.2020 வரை இரண்டு மாத காலம் வரை தீ - கரன் சமூக தொண்டு நிறுவனம் ஒப்பந்ததாரர் மூலமாகவே ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்திலேயே மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.11,30,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலன் கருதியும் மேற்படி ஒப்பந்ததாரரிடம் அதே ஒப்பந்தபுள்ளியின்படி 01.07.2020 முதல் 31.08.2020 முடிய நீட்டிக்க மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மானம் எண்:-743**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.06.2020 | **பொருள் எண் 13**<br>இந்நகராட்சியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளுக்காக ஏற்கனவே 23 பணியாளர்கள் தனியாரிடமிருந்து ஒப்பந்தம் பெறப்பட்டு டெங்கு தடுப்பு நடவடிக்கை பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே இப்பணிக்காக இந்நகர் மன்ற தீர்மான எண் 475 நாள் 30.05.2019ல் ரூ.30,50,000/- ((முப்பது லட்சத்து ஐம்பதாயிரத்திற்கு) மாவட்ட ஆட்சியர் திருவாரூர் அவர்களின் தினக்கூலி விலை விகித அடிப்படையில் மேற்படி 23 பணியாளர்களை பணி அமர்த்தி பணி மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டு தீ.கரன் சமூக தொண்டு நிறுவனம் மூலம் 01.07.2019 முதல் 30.06.2020 வரை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது 01.07.2020 முதல் 30.06.2021 வரை 23 டெங்கு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்த 26.06.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளி நிர்வாக காரணத்தினால் ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனை சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொது சுகாதாரம் நலன் கருதியும், எதிர் வரும் காலம் மழைக்காலமாக இருப்பதாலும் மேற்படி பணியினை 01.07.2020 | **தீர்மானம் எண்:-744**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | முதல் 31.08.2020 வரை தீ-கரன் சமூக தொண்டு நிறுவனம் ஒப்பந்ததாரர் மூலமாகவே ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்திலேயே டெங்கு பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவுத் தொகை ரூ.5,10,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>‘அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலன் கருதியும் மேற்படி ஒப்பந்ததாரரிடம் அதே ஒப்பந்தபுள்ளியின்படி 01.07.2020 முதல் 31.08.2020 முடிய நீட்டிக்க மன்றம் அனுமதிக்கலாம் | |

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி